செய்தி வெளியீடு எண்–628 நாள்–1.10.2007

# <u>செய்தி வெளியீடு</u>

கிராம ஊராட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் அவை நிகழ்த்தியுள்ள சாதனைகளின் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் 15 கிராம ஊராட்சிகளுக்கு பரிசு வழங்குவதென அரசு முடிவு செய்தது. கிராம ஊராட்சிகளுக்கான இந்த விருதிற்கு **"உத்தமர் காந்தி ஊராட்சி விருது"** என்ற பெயர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் சூட்டப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக்கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.8.2006 அன்று சட்டமன்றத்தில் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

> "சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டினை கௌரவிக்கும் வகையில் உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும். இவ்விருதிற்காக ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கப்படும்".

இந்த விருதினை பெறத் தகுதிஉடைய கிராம ஊராட்சிகளை தேர்வு செய்வதற்கான வழிகாட்டி நெறிமுறைகளை குறித்து அரசாணை எண்.111 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 5.9.2006 மூலம் ஆணையிடப்பட்டது.

முன்னோடியாக விளங்கும் வகையில், புதுமையான முயற்சிகளை செயல்படுத்தி மிகச் சிறந்த பணிகளை நிறைவேற்றியுள்ள 124 கிராம ஊராட்சிகளின் விவரங்கள் மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையுடன் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் ஊரக வளர்ச்சி துறை இயக்குநரகத்தில் பெறப்பட்டன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை இயக்குநரகத்தில் இயக்குநர், ஊரக வளர்ச்சி உள்ளிட்ட உயர்நிலை அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பரிசீலனைக்குழு ஆய்வு செய்து 46 கிராம ஊராட்சிகளின் பெயரை தேர்வு செய்தது.

இந்த 46 கிராம ஊராட்சிகளிலிருந்து விருது பெறுவதற்கான 15 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்வதற்கு இயக்குநர், ஊரக வளர்ச்சி (பயிற்சி) தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவின் மூலம் 46 கிராம ஊராட்சிகளிடமிருந்தும் அவற்றின் சுயமதிப்பீட்டு அறிக்கையை பெற்று, தலப்பார்வை, அலுவலக ஆய்வு, ஊராட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஆகிய முறைகளை பின்பற்றி உத்தமர் காந்தி ஊராட்சி விருது பெறுவதற்கு தகுதியான 15 கிராம ஊராட்சிகளின் பெயர்களை தேர்வு செய்யப்பட்டன.

அவற்றின் விபரம் பின்வருமாறு:—

| வ.எண் | கிராம ஊராட்சியின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | ஓடந்துரை | கோயம்புத்தூர் |
| 2 | திண்டல் | ஈரோடு |
| 3 | மைக்கேல்பட்டிணம் | இராமநாதபுரம் |
| 4 | நாலுக்கோட்டை | சிவகங்கை |
| 5 | காட்டுப்புதுார் | வேலூர் |
| 6 | சின்னனூர் | சேலம் |
| 7 | கீழத்திருப்பாலக்குடி | திருவாரூர் |
| 8 | திக்கணங்கோடு | கன்னியாகுமரி |
| 9 | வாலாடி | திருச்சி |
| 10 | லஷ்மிபுரம் | தேனி |
| 11 | கடச்சநல்லூர் | நாமக்கல் |
| 12 | பாப்பநல்லூர் | காஞ்சிபுரம் |
| 13 | எம்.கோலக்குடி | கடலூர் |
| 14 | ஜக்கம்பட்டி | விழுப்புரம் |
| 15 | கே.கீரனூர் | திண்டுக்கல் |

கிராம ஊராட்சிகளுக்கு அவற்றின் ஒட்டுமொத்த சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில் மாநில அளவிலான விருது வழங்குவது இதுவே முதல் முறையாகும். உத்தமர் காந்தி ஊராட்சி விருது பெறுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இந்த 15 கிராம ஊராட்சிகளுக்கும் தலா ரூபாய் 5 லட்சம் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் கேடயம் ஆகியவை விரைவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்படவுள்ளன.

வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.